1979 ஏப்ரல் 20]

*வினா எண்.745—திரு. துரை முத்துசாமி, திரு.நா.பழனிவேல் மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1971–79, 1979–80-ம் ஆண்டில் தமிழ்நாடு அரிசன வீட்டு வசதி வாரியத்தின் மூலம் எத்தனை வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது?

(ஆ) அது எங்கெங்கு கட்டப்படும்?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :

(அ) 1978–79–ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் மூலம் 1660 வீடுகள் கட்ட உத்திரவிடப்பட்டுள்ளது. 1979–80-ம் ஆண்டில் வீடுகள் கட்டுவது குறித்து 1979–89-நிதி ஆண்டில் பரிசீலித்து முடிவு செய்யப்படும்.

(ஆ) விவரப்பட்டியல் * இப்பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

*வினா எண்.746—திரு.மொ.பெரியசாமி: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1979–ஆம் ஆண்டு பிப்ரவரி வரை தமிழ்நாடு அரிசன வீட்டு வளர்ச்சிக் கழகத்தால் கட்டப்பட்டுள்ள வீடுகளின் மொத்த எண்ணிக்கை என்ன? ஆண்டு வாரியாக?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:

1979–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரை தமிழ்நாடு அரிசன வீட்டுவசதி வளர்ச்சிக்கழகத்தால் கட்டப்பட்டுள்ள வீடுகளின் மொத்த எண்ணிக்கை 38,211.

ஆண்டு வாரியான விபரங்கள் கீழ்க்கண்டவாறு உள்ளன.—

ஆண்டு.	கட்ட அனுமதியளிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை.	கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)
1974–75	10,000	2,892
1975–76	20,000	27,130
1976–77	5,045	3,021
1977–78	5,000	1,850
1978–79	1,660	3,318
மொத்தம் ..	41,705	38,211

..891 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.